<u>சுருக்கம்</u>

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் – முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளியாவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.72,000/–லிருந்து ரூ.1,20,000/– ஆக உயர்த்த ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (அஉதி–1) துறை</u>

அரசாணை (நிலை) எண். 560

நாள்: 16 .12.2021
திருவள்ளுவராண்டு–2052
பிலவ, மார்கழி – 01

<u>படிக்கப்பட்டது:</u>

தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கடித எண்.3754/த.நாசுதி/காப்பீடு/2021, நாள் 05.08.2021 மற்றும் 09.08.2021.

*****

<u>ஆணை:</u>

மேலே பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

- உயிர்காக்கும் மருத்துவ சிகிச்சைகளை கட்டணமில்லாமல் ஏழை மற்றும் குறைந்த வருவாய் உடையவர்கள் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பெற வேண்டும் என்ற உயரிய நோக்குடன் முதல்வர் கலைஞரின் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாடு அரசால் 23.07.2009 அன்று தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளியின் குடும்பத்திற்கு ரூ.1.00 இலட்சம் வரை இலவசமாக சிகிச்சை பெற காப்பீடு செய்யப்பட்டது.

- இக்காப்பீட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 11.01.2012 முதல் விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அரசாணை (நிலை) எண்.169, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி 2–(2)) துறை, நாள் 11.07.2011–ல் குடும்பத்தின் ஆண்டு வருமாணம் ரூ.72,000/– க்கும் குறைவாக உள்ள குடும்பங்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு தற்போது வரை ஆண்டு வருமான வரம்பில் எந்தவித மாற்றமுமின்றி தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

- தமிழ்நாட்டில் செயல்பாட்டில் உள்ள முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்துடன் 'பிரதான் மந்திரி ஜன் ஆரோக்யா யோஜனா' என்ற திட்டத்தினை ஒருங்கிணைத்து முதலமைச்சரின் விரிவான

மருத்துவ காப்பீட்டுத் திட்ட பயனாளிகளுக்கும் காப்பீட்டுத் தொகை ரூபாய் 5.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- பல்வேறு தளங்களிலிருந்து பெறப்பட்ட கோரிக்கை மற்றும் கருத்துருவின் அடிப்படையில், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் தற்போது வரையறுக்கப்பட்டுள்ள குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/- ஆக உள்ளதை ரூ.1,20,000/- ஆக உயர்த்தலாம் என தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்காணும் சூழ்நிலையில், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, 11.01.2022 முதல் புதிதாக நீட்டிக்கப்படவுள்ள முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் பயனாளியாவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ.72,000/-லிருந்து ரூ.1,20,000/- ஆக உயர்த்தலாம் என ஆணையிடுகிறது.

3. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 46464/சுகாதாரம்-II/2021, நாள்: 22.10.2021-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், சென்னை-6.
தலைமைச் செயலக அனைத்து துறைகள்.
இத்துறையின் கீழுள்ள அனைத்து இயக்குநரகங்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18/35.
கருவூல கணக்கு அலுவலர், சென்னை-1/35.
நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
தலைமைச் செயலரின் தனிச் செயலர், சென்னை -9.
முதன்மைச் செயலர் (தனிச்செயலர்) அவர்களின் தனிச்செயலர், சென்னை-9.
மருத்துவம் -மக்கள் நல்வாழ்வுத் (தகவு/அனைத்துப் பிரிவுகள்) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16.12.2021
பிரிவு அலுவலர்